# திருமலைத்தீபம்

Thirumalaitheepam

திருகோணமலை மறைமாவட்டத்தின் மாதாந்த பத்திரிகை

சுடர் – 29
விலை ரூபாய் 20.00

தீபம்-29 | ஆனி இதழ்-2016,
ஆரம்பம் 15 மாசி-2013.



திருமறைக்கல்வி நடுநிலையம்,
இல: 297 டொக்கியாட்வீதி, திருகோணமலை.

E-mail : catetcota@gmail.com
T.P : 026 222 1022, 026 320 2532


"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர் [தூய மத்தேயு 5:3]"



## ஆயரின் செய்தி

*கிறிஸ்துவில் அன்புள்ள இறைமக்களே!*

மரியன்னையின் வணக்க மாதத்தைக் கடந்து தூய ஆவியிலும் மரியன்னையிலும் வழிகாட்டலைப் பெற்றவர்களாக ஜீன் மாதத்தினுள் நுழைகிறோம்.

இம்மாத்திலும் இரு முக்கிய நிகழ்வுகளை நாம் குறிப்பிடலாம்.

**01.திரு இருதயஆண்டவரின் பெருவிழா** (ஜுன்-03). இரக்கத்தின் ஆண்டிலே இயேசுவின் இதயத்திலிருந்து வழிந்தோடும் அன்பையும் இரக்கத்தையும் அனுபவிக்கவும் வாழ்ந்துகாட்டவும் அழைக்கப்படுகின்றோம். இயேசுவின் காலத்தில் வாழ்ந்த குருக்கள், யூதத் தலைவர்களின் செயல்பாடுகள், கண்டிப்புகள், சட்டங்கள், கடினப் போக்கிற்கு எதிர்மறையாக இயேசுவின் மன நிலையும் செயல்பாடுகளும் இருந்தன. பாவிகளை வரவேற்றார், மன்னித்தார், அவர்களோடு உறவாடினார். யூதத் தலைவர்களிடமிருந்து எதிர்ப்புகள் வந்தாலும் அவர் அது பற்றி கவலைப்படாமல் இறைத்தந்தையின் அன்பையும் இரக்கத்தையும் மக்கள் உணர வேண்டும் எனும் எண்ணத்தோடு செயல்பட்டார். அதே அன்பு எமக்கும் இலவசமாகத் தரப்படுகின்றது. ஏற்பதும் நிராகரிப்பதும் எமது முடிவு.

07ம் திகதி வழமைபோல மறைமாவட்டத்தில் பணியாற்றும் குருக்கள் ஒன்றாக இணைந்து ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையில் ஈடுபட்டு தமது குருத்துவத்தைப் புதுப்பித்துக் கொள்வார்கள். எமது மறைமாவட்ட குருக்களுக்காக விசேடமாக செபிப்போம்.

**02.பதுவைநகர் தூய அந்தோனியார் நினைவு** (ஜுன்-13). காணாமல்போன பொருட்களை கண்டுபிடித்துத் தருபவராக தூய அந்தோனியார் உலகமக்கள் மத்தியில் பிரசித்திபெற்றுள்ளார். இவர் போத்துக்கல் நாட்டில் லிஸ்பன் நகரில் பிறந்து பிரான்சிஸ்கன் சபையில் இணைந்து இத்தாலியில் பாதுவாவில் பலவருடங்கள் வாழ்ந்து பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் பல மறைமாவட்டங்களில் தூய அந்தோனியார் திருத்தலங்கள் உள்ளன. எமது மறைமாவட்டத்தில் திருத்தலமாக இல்லாவிட்டாலும் பேராலயப் பங்கு, மூதூர், சீனக்குடா, கல்லறாவ போன்ற இடங்களில் உள்ள தூய அந்தோனியார் ஆலயம் மக்கள் அதிகமாக தரிசிக்கின்ற ஆலயங்களாக உள்ளன. தூய அந்தோனியாரைப் போன்று நாமும் இறைபற்று கொண்டவர்களாக வாழ்ந்து எமது வாக்காலும் வாழ்வாலும் இறைபுகழ் சாற்றுவோம்.

**03.திருத்தந்தையின்தினம்** (ஜுன்-19). 'நீ பாறை. இந்தப்பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்', இத்தினத்திலே நம் திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் சிறப்பாக திருச்சபையை வழிநடத்தவேண்டுமென இறைவனிடம் செபிக்ககடமைப்பட்டுள்ளோம். 'நீங்கள் உலகத்தின் மனச்சாட்சி' என்று கிறிஸ்தவரல்லாத ஒரு அரச தலைவர் குறிப்பிடுமளவிற்கு திருத்தந்தையின் வார்த்தைகள், போதனை, வழிகாட்டல், வாழ்வு அமைந்துள்ளன. உலகமே அவரைத் திரும்பிப் பார்க்க வைத்தவர் அவர். எனவே திருத்தந்தையின் பணிமேலும் பலரை சென்றடைய செபிப்போம். அவரது பணி சிறக்க எமது தாராள நிதியுதவியையும் செய்வோம்.

**04.தூய திருமுழுக்கு யோவானின் பிறப்பு பெருவிழா** (ஜுன்-24). மரியா, இயேசு, திருமுழுக்கு யோவான் மூவரின் பிறப்பும் திருச்சபையால் பெருவிழாவாக சிறப்பிக்கப்படுகின்றன. ஏனைய புனிதர்களின் மரணித்த நாள் தான் திருச்சபையால் சிறப்பிக்கப்படுகின்றது. மரியா, திருமுழுக்கு யோவான் இருவரும் இயேசுவின் பிறப்போடு நெருங்கிய தொடர்புபட்டுள்ளதால் இவர்களது பிறப்பை விசேடமாக திருச்சபை சிறப்பிக்கின்றது.

**05.தூய பேதுரு, தூய பவுல் பெருவிழா** (ஜீன்-29). திருச்சபையின் இரு தூண்களாக இவர்கள் கருதப்படுகின்றார்கள். தொடக்க திருச்சபையிலே தூய பேதுரு யூதருக்கு நற்செய்தி சொல்லவும் தூய பவுல் பிறவினத்தவருக்கு நற்செய்தி சொல்லவும் அனுப்பப்பட்டார்கள் எனக் கருதலாம். இவர்களது போதனை, வாழ்வு, அர்ப்பணம் இன்றும் எமக்கு சவாலாகின்றன. இருவரும் மறை சாட்சிகளாக இறந்தார்கள். பேதுருவை சிலுவையில் அறைந்து கொல்ல முயன்றபோது ஆண்டவரைப் போல கொல்லப்பட நான் தகுதியற்றவன். என் சிலுவையை தலைகீழாக நாட்டுங்கள் என்றார். என பாரம்பரியம் சொல்கிறது. பவுல் உரோமையில் தலை வெட்டுண்டு இறந்தார். இப் புனிதர்களிடமிருந்து நாம் பலவிடயங்களைக் கற்றுக் கொள்ளலாம். இறைவனின் மகிமைக்காக நாமும் எம்மை அர்ப்பணிப்போம்.

தொடர்ச்சி 02ம் பக்கம்

## தூய பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயத்திற்கு "பாண்ட்" இசைக்கருவிகள் அன்பளிப்பு



திருகோணமலை நகரில் அமைந்துள்ள மிகவும் வறுமை நிலையிலுள்ள மாணவர்கள் கல்வி கற்கும் தி/தூய பிரான்சிஸ் சவேரியார் மகா வித்தியாலயத்தில் 'பாண்ட்' இசைக்கருவி இல்லாத குறையை நீக்கி, நிவர்த்தி செய்து, அவற்றைப் பெருமனதுடன் தந்துதவிய எமது திருகோணமலை மறைமாநில ஆயர் அதிவந்தனைக்குரிய கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றிகளும், அவரது பணிவாழ்வு சிறக்க இறையாசீரையும் இறைஞ்சுகின்றேன்.

பாடசாலைக்கு வருகை தந்த ஆயர் அவர்கள், அதிபர் திருமதி A.V.A. கிருபாகரன் அவர்களிடம் 'பாண்ட்' இசைக்கருவிகளை வழங்கி வைத்தமை குறிப்பிடத்தக்கது.

## அன்னை திரேசா புனிதர் பட்ட நிகழ்வில் முதலமைச்சர் மம்தா



வருகிற செப்டம்பர் 4ம் திகதி வத்திக்கானில், அருளாளர் அன்னை திரேசா புனிதராக அறிவிக்கப்படும் திருப்பலியில், மேற்கு வங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்கள் கலந்து கொள்வதற்கு தீர்மானித்துள்ளார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அன்னை திரேசா பிறரன்பு மறைப்பணியாளர் சபைச் சகோதரிகளின் அழைப்பின் பேரில் மம்தா பானர்ஜி அவர்கள் இம்முடிவை எடுத்துள்ளார். வருகின்ற செப்டம்பர் 4ம் திகதி காலை 10.30 மணிக்கு வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், அருளாளர் அன்னை திரேசா புனிதராக அறிவிக்கப்படும் திருப்பலியை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் நிறைவேற்றுவார்.

முதலமைச்சர் மம்தா பானர்ஜி அவர்களுடன் அன்னை திரேசா பிறரன்பு மறைப்பணியாளர் சபைத்தலைவர் அருள்சகோதரி பிரேமா, கொல்கொத்தா பேராயர் தோமஸ் டி சூசா, பல உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் அன்னை திரேசா தலைமை இல்லத்தோடு தொடர்புடைய தனிநபர்கள் என, ஒரு பிரதிநிதிகள் குழு இத்திருப்பலியில் கலந்து கொள்ளும். 1997ம் ஆண்டு செப்டம்பர் 5ம் திகதி இறந்த அன்னை திரேசாவை, 2003ம் ஆண்டு ஒக்டோபர் 19ம் திகதி, திருத்தந்தை 2ம் ஜோன் போல் அவர்கள் முத்திப்பேறு பெற்றவராக அறிவித்தார்.

ஆதாரம்: வத்திக்கான் வானொலி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உங்கள் பகைவரிடமும் அன்புகூருங்கள்.[தூய மத்தேயு 5:44]"

## உங்களோடு பேசுகிறேன்...

அருட்பணி. N.C. அருள்வரதன்

மீண்டும் உங்களோடு பேசுவதற்கு ஒரு வாய்ப்பு பெருமகிழ்வே புதிய மாதம் பிறந்து விட்டது ஆன்மீக நிலைகளை நோக்கும் போது இம்மாதம் மூன்றாம் திகதி இயேசுவின் திரு இருதயப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. இந் நாமம் தாங்கிய இருதயபுர மக்களும் திரு இருதயப் பெருவிழாவைக் கொண்டாடுகின்றார்கள். இருதயபுர பங்குத்தந்தைக்கும் பங்குச் சமூகத்திற்கும் எமது நல்வாழ்த்துக்கள் பதின்மூன்றாம் திகதி தூய அந்தோனியாரின் திருவிழா நாளாகும். இதன் படி சீனக்குடா, ஆத்திமடு, மூதூர், திருகோணமலை, கல்லறாவை, பங்கு மக்களும் தூய அந்தோனியாரின் பெருவிழாவை பங்கு ரீதியாக கொண்டாடுகின்றார்கள். எல்லோரும் எங்கள் வாழ்த்துக்கள் இருபத்தி நான்காம் திகதி திருமுழுக்கு யோவானின் பெருவிழாவும் இருபத்தொன்பதாம் திகதி திருத்தூதர்களான தூய பேதுரு தூய பவுல் அவர்களின் விழாவையும் கொண்டாடுகின்றோம்

நமக்கு முன்னோர்களாக வாழ்ந்து இயேசுவின் வழிகளை காட்டிய திருத்தூதர்களின் வழிமுறைகளில் நாமும் வாழ்வோம் வாழ முயல்வோம் இம்மாதம் மூன்றாம் திகதி அருட்பணி லக்ஸ்மன் பீரிஸ் (இயே.ச) தமது குருத்துவ நாளையும் அருட்பணி சீ. இராஜேந்திரம் (இயே.ச) அடிகளார் தமது குருத்துவ நாளைக் கொண்டாடுகின்றார்கள் இவர்கள் தொடர்ந்தும் தமது பணிகளை நிறைவாக ஆற்ற வாழ்த்தி இறைவனிடம் வேண்டுவோம்.

சர்வதேச நிலைகளை நோக்கும் போது இருபதாம் திகதி சர்வதேச நல்லொழுக்க தினம் கொண்டாடப்படுகிறது. இது மிகவும் முக்கியமான நாளாகும். நல்லொழுக்கமென்பது மிகவும் மேலானது. உயர்வான சிறப்பானது ஆனால் அக்காலத்தின் அதன் சிறப்பும் பெருமையும் மறைந்து கொண்டு போகின்றது. தாய், தந்தை, பிள்ளைகள், நண்பர் இப்படி உறவு நிலைகளிலே வாய்விட்டுச் சொல்ல முடியாத அளவிற்கு ஒழுக்க நிலைகள் சீரழிந்திருப்பதை நாளாந்த செய்திகள் மூலம் அறியக்கிடப்பது பெரும் வேதனையே வன்முறைகள் வல்லுணர்வுகளால் நல்லொழுக்க நிலைகள் வீழ்ச்சி உற்றுக் கொண்டிருப்பதை அவதானிக்கின்றோம். இந்நிலைகள் மாற்றமடைந்து நல்லொழுக்கத்தை எங்கும் காண செயலாற்றுவோம் வேண்டி நிற்போம்

மேலும் இருபத்தேளில் சர்வதேச நீரழிவு தினமாகும் இத்தினத்தில் இந்நோயினால் பாதிக்கப்பட்டோருக்காக இறைவனிடம் வேண்டி நிற்போம் இந்நோய் மறைய இறைவனே துணை புரிய வேண்டும்.

மேலும் நமது நாட்டின் அரசியலை நோக்கும்போது வன்முறைகள் வெடித்துப் பரவுவதை சில அரசியல்வாதிகளின் வார்த்தைகள் வார்த்தைப் பிரயோகங்கள் வெளிக்காட்டிக் கொண்டிருக்கின்றன. மீள் குடியேற்றம் இழப்பீடுகள் சொந்த மண்ணிலே வாழ வேண்டுதல் என்று ஒரு புறமாகவும் இராணுவக் கட்டுப்பாடுகள் இன்னுமொரு புறமாகவும் மோதிக் கொள்வதை அவதானிக்க முடிகின்றது.

பேதங்கள் மறைய வேண்டும் வேறுபாடுகள் மறைய வேண்டும் மொழி இனம் பிரதேசம் என்னும் பிளவுகள் நீங்கி ஓரினம் ஒரு நாட்டின் குடி மக்கள் என்னும் நிலை அனைத்து மக்கள் உணரவும் அனைத்து மக்களும் இதனைக் காணவும் வழிகள் அமைக்கப்பட வேண்டும். இதுவே நாட்டிற்கு இன்று அவசியமானதெனக் கூறிக்கொண்டு மீண்டும் உங்களோடு பேசுவேன் எனக் கூறி நிற்கின்றேன்

**நீ கொடுப்பது எவ்வளவு பெரிய கொடையானாலும் அன்பின்றிக் கொடுத்தால் அது புண்ணியம் தராது.**

**(சேக்ஸ்பியர்)**

## ஆயரின் செய்தி

01ம் பக்கத் தொடர்ச்சி ...

**06. இவ்வருடம் மார்ச் மாதம் திருத்தந்தை பிரான்சிஸ் "குடும்பத்தில் அன்பு"** எனும் தலைப்பில் இரக்கத்தின் ஆண்டிற்கான சிறப்புத் திருமடலை வெளியிட்டுள்ளார். குடும்பங்கள், பிறப்பு, அன்பு, குடும்பபோராட்டம் பலவற்றை விவிலியம் தாங்கி நிற்கிறது என்று குறிப்பிடும் திருத்தந்தை இன்று குடும்பங்கள் பல சவால்களை சந்தித்தாலும் எல்லாவற்றையும் கடந்து நிற்பது அன்பு, இதுவே குடும்பத்தை தாங்கி நிற்கிறது என்றார். அன்பு அனைத்தையும் தாங்கும், அன்பின் வெளிப்பாட்டின் உச்சமே குழந்தைகள் எனவே குடும்பங்கள் சிறக்க சரியான அடித்தளம் தேவை என்றும் திருத்தந்தை குறிப்பிடுகிறார்.

**07. கடந்த மாதம் எமது மறைமாவட்டத்தில் பலசெயல்பாடுகள் இருந்தன. பங்குத் தரிசிப்பு, இல்லத் தரிசிப்பு என்று ஆயன் தன் மந்தையை அறியும் நோக்கோடு பல செயல்பாடுகள் இடம் பெறுகின்றன.** நாம் மேற்கொள்ளும் அனைத்து ஆன்மீகம் சார்ந்த முயற்சிகளுக்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பு கொடுக்கவேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இது எமது மறைமாவட்டம் எனும் உணர்வோடு செயல்படுவோம், செபிப்போம், ஆதரவாயிருப்போம்.

*கிறிஸ்துவில்,*
*பேரருட்திரு கிறிஸ்டியன் நோயல் இம்மானுவேல்*
*திருகோணமலை மறைமாவட்ட ஆயர்.*

## திருச்சபையில் பொதுநிலையினரின் பங்கு, அழைப்பு, திருத்தூதுப் பணிவாழ்வு

இன்றைய சூழலில் திருத்தூதுப் பணியில் பொதுநிலையினரின் தேவையை சரிவர நன்கு அறிந்து கொண்ட திருச்சபை திருத்தூதுப் பணியில் அவர்களையும் இணைத்து பங்கு கொள்ளச் செய்து பயணிக்கத் தொடங்கியுள்ளது. திருச்சபையில் பலவகைத் திருப்பணிகள் உள்ளன. எனினும் அதன் தூதுப்பணி ஒன்றே. எனவே கிறீஸ்துவின் திருப்பணியில் பொது நிலையினரும் பங்கு பெறுகின்றனர்.

கிறீஸ்துவின் உடலாகிய திருச்சபையில் உறுப்புக்கள் பல. அவ் உறுப்புக்கள் இணைந்து திருச்சபையின் நிலைபேறான தன்மைக்கும் வளர்ச்சிக்கும் பங்காற்றுகின்றன. இவ் உறுப்புக்களில் பொதுநிலையினரும் அடங்குகின்றனர். அவர்கள் தங்கள் பணியை கிறீஸ்துவிற்கு உகந்த வழியில் செய்யாத விடத்து கிறீஸ்துவின் உடலாகிய திருச்சபை நலிவடைய அவர்களே காரணமாகின்றனர்.

இன்று நாளுக்கு நாள் உலகமெங்கும் திருச்சபையின் அங்கத்தவர்கள் பெருகிய வண்ணமே உள்ளனர். அவர்கள் அனைவருக்கும் நற்செய்தியை அறிவிக்கும் தூதுப்பணியைச் செய்வதற்கு திருப்பணியாளர்களின் எண்ணிக்கை போதாமலுமுள்ளது. எனினும் உலகின் கடை எல்லை வரை சென்று நற்செய்தியை பறைசாற்ற வேண்டியது திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொரு கிறிஸ்தவனதும் கடமையாகும். உலகியல் வாழ்வில் நேரடியாக ஈடுபடுகின்ற பொதுநிலையினராகிய எமக்கு ஒவ்வொரு இடத்திலும் கிறுஸ்துவின் மீட்புச் செய்தியை அறிவிக்கக் கூடிய வாய்ப்பும் வசதியும் கிடைக்கின்றது.

கிறிஸ்துவின் உடலாகிய நாம் கிறிஸ்துவின் செயல்களை வெளிப்படுத்துகின்றவர்களாக இருக்க வேண்டும். "நல்ல சிந்தனைகள் சிறந்த செயற்பாடுகளின் அடிப்படை" உலகில் வாழுகின்ற அனைத்து மக்களிலும் கிறிஸ்தவர்கள் மாத்திரமே "கிறிஸ்தவர்" எனும் பெயரோடு அழைக்கப்படுகின்றனர். ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவின் பிள்ளைகள் அவருக்கே உரித்தானவர்கள். அவரோடு அனைவரையும் இணைக்க அனுப்பப்பட்டவர்கள் கிறிஸ்துவின் தூதுப் பணிக்கென தலைமுறை தலைமுறையாக தேர்ந்து கொள்ளப் பட்டவர்கள்.

கிறிஸ்துவின் உடலாகிய திருச்சபையை உலகம் முழுவதும் வியாபிக்கச் செய்து ஒரே உடலாகிய திருச்சபையில் உலகிலுள்ள ஒவ்வொரு கிறிஸ்தவனும் உறுப்பினராக உழைக்க வேண்டியது கிறிஸ்துவின் உடலின் அங்கமாகிய எம் ஒவ்வொருவரதும் உரிமையும் கடமையுமாகக் காணப்படுகின்றது. நான் திருச்சபையில் ஓர் சிறிய அங்கத்தவன் என்று கூறி எமது பாரிய பொறுப்பை ஒதுக்கி விட முடியாது. எமது உடலின் ஓர் உறுப்பு நான் சிறியவன் என்னால் ஓர் பிரயோசனமும் இல்லை என்னால் எதுவும் செய்ய முடியாது என்று கூறி விட்டால் எமது உடல் சீராக இயங்க முடியுமா ? அவ்வாறே திருச்சபையின் திருத்தூதுப்பணியில் எமது பங்கும் அமைகின்றது. சிறியதாக இருந்தாலும் எமது பணி அளப்பரியது . அளவிட முடியாதது. நாம் ஒவ்வொருவரும் நாம் பெற்றுக் கொண்டதற்கேற்ப தூதுப்பணியை ஆற்ற அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

இறைவனோடு ஒன்றித்து வாழும் நாம் எம்முடைய வாழ்க்கையை இறை ஒன்றிப்பில் இருந்து பிரித்துவிட முடியாது. நம் வாழ்வில் நாம் சந்திக்கின்ற நபர்கள், பேசுகின்ற வார்த்தைகள், செய்கின்ற செயற்பாடுகள் அனைத்தும் இறைவனுக்கு ஏற்றதாக அமைவதோடு, இறை பணியாக நற்செய்தி அறிவிக்கும் தூதுப்பணிக்கு அடிப்படையாக அமையவேண்டும். இவ்வாறு அமைகின்றபோது எமது அன்றாட அலுவல்கள், குடும்பக் கவலைகள், தொழில்துறை சார்ந்த பிரச்சனைகள், ஏனைய பொதுவான உலகியல் சார்ந்த அலுவல்கள் என அனைத்துமே எமது தூதுப்பணியின் செயற்பாட்டிற்கு வேறுபட்டதாக இருக்க முடியாது. எம்முடைய பார்வைகள் சரியாக இருக்கின்றபோது எமது செயற்பாடுகளும் சிந்தனைகளும் கிறிஸ்துவைச் சார்ந்தவையாக இருக்கும் . எமது இறைவாழ்வும் அவ்வாறே அமையும் . ஒவ்வொரு பொதுநிலையினரும் கிறிஸ்துவின் பாடுகளில் பங்கு கொள்கின்ற போது அவரது உயிர்ப்பில் பங்கு பெற்றுவிட்டனர். அவ்வாறெனில் அவரது நற்செய்தியை அறிவிக்கும் தூதுப்பணியில் ஈடுபடுகின்ற போது கிறிஸ்துவுடன் நிலைவாழ்விலும் இணைந்துவிட்டனர் எனலாம் அல்லவா ?

நிலைவாழ்வைப் பெறும் பொருட்டு நம் வாழ்வை மாற்ற வேண்டும். கடவுளின் அன்பில் நிலைத்திருக்கும் நாம் அவர் சார்ந்த அன்புச் செயல்களிலும் நிலைத்திருக்க வேண்டும். எமது பணிவாழ்வு அதற்கு சான்று பகர வேண்டும். நாம் வாழ்கின்றோம் என்றால் அது கிறித்துவின் தூதுப்பணியில் பயணிக்கின்றோம் என்றாக வேண்டும். இல்லையேல் அவ்வாழ்வு பயனற்றதாகின்றது. எமது வாழ்வு கிறிஸ்துவை மகிழ்விக்கின்றது என்றால் எம் வாழ்வு கிறிஸ்துவின் நற்செய்தி தூதுப்பணியை சரிவர நிறைவேற்றுகின்றது என்று பொருள் கொள்ளலாம்.

பொது நிலையினராகிய எமது அருள் வாழ்வும், திருத்தூதுப் பணிவாழ்வும் ஒரே திசையில் இறைவாழ்வை நோக்கி பயணிக்க திருச்சபையில் எமது பங்கு, அமைப்பு, திருத்தூதுப்பணி வாழ்வு என்பவற்றை அறிந்து பாதையை விட்டு விலகாதவர்களாக அனைவரையும் இணைத்துக் கொண்டு இறைவாழ்வின் பாதையில் பயணிப்போம்.

திரு சுரேஸ்
மூதூர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டவரின் இரக்கத்தை உணர்ந்த அந்தோணி

கிட்னி மாற்ற வேண்டும் என்றவுடன் அதிர்ச்சியில் உறைந்தான் அந்தோணி. அந்தோணி என்பவன் பெரியகுளம் எனும் கிராமத்தில் மிகப்பெரிய செல்வந்தன். அவனின் உலோப தனத்திற்கும் குறைவே இல்லை. அவனிற்கு மனைவி, பிள்ளைகள், உறவு என்று யாருமே இல்லை. ஆனாலும் அவன் தனது தேவைக்கு மேலான சொத்தை சேர்த்து சேமித்து வைத்திருப்பவன். அவன் ஏழை எளியவர்களுக்கு அருகால் செல்வதைக்கூட அவமானம் என நினைப்பவன். அந்த அளவிற்கு அவன் ஆண்டவர் அவனுக்கு இரக்கம் எனும் கொடையை அளிக்க அவனிற்கு பலமுறை வாய்ப்பளித்து அவன் அதை ஏற்கவில்லை . இறுதியாக ஆண்டவரால் ஒரு வாய்ப்பு அளிக்கப்பட்டது.

அவனின் வீட்டிற்கு அருகில் மைக்கல் எனும் ஒரு ஏழை கூலி தொழிலாளி இருந்தான். அவன் தனது பிள்ளைகளை படிக்க வைப்பதற்கே இவ்வாறு கஸ்டப்படுவான். ஒரு சில காலங்களாக அவன் செய்த வேலைகள் அனைத்தும் நிறுத்தப்பட்டன. அவனின் பிள்ளைகள் "அப்பா பள்ளி கூடத்தில் காசு கட்ட வேணும் அப்படி கொண்டு வராட்டி பள்ளிக்கூடம் வரவேண்டாம் என டீச்சர் சொல்லிட்டா அப்பா" என கூறி அந்த படிப்பு ஆர்வமிக்க பிஞ்சுகள் கண்கலங்கினர். தனது பிள்ளைகளின் கண்ணீரைப் பார்த்து மைக்கல் கதறினான். அப்போது அவனின் மனைவி "நீங்கபோய் அந்த அந்தோனி பெரி-யவரிடம் ஏதாவது உதவி கேட்கலாமே" என்று கூறினாள்.. அப்போது மைக்கல் "அந்த பெரியவர்டையா? அவருக்கு எங்கள மாதிரி ஏழைகள கண்ணாலேயே காட்ட கூடாது. நான் எப்படி போய் கேட்பேன்" என தயங்கினான். அப்போது பேபி (மைக்கலின் மனைவியின் பெயர்) நீங்க ஆண்டவர வேண்டிட்டு போங்க எல்லாம் அவர் பார்த்து கொள்வார்" என்றாள். அப்போது மைக்கல் எழுந்து தனது சட்டையை எடுத்து போட்டுக் கொண்டு அந்தோனியின் வீட்டு பக்கம் சென்றார்.

அந்தோனியின் பூட்டப்பட்ட வீட்டு வாசலின் அருகினில் ஒரு மணி பொருத்தப்பட்டு இருந்தது அதனை அழுத்திய பின் "ஐயா" என பயந்து பயந்து அழைத்தான் மைக்கல். கன நேரம் அழைத்தான். பின்னர் "யார் அது" என்ற வீட்டு பக்கம்" என மிக கோபத்துடன் வந்தான் அந்தோணி. அவன் மைக்கலை கண்டதும் சாக்கடையில் கிடக்கும் குப்பையை அறுவெறுப்பது போல் அறுவெறுத்தான்.. அந்தோணி "என்ன வேணும்" என வெறுப்பில் கேட்டான் மைக்கலிடம். "ஐயா நான் உமது வீட்டின் அருகில் இருக்கும் மைக்கல். எனது வீட்டில் தற்போது மிகவும் கஸ்டம் தயவு செய்து கொஞ்சம் காசு இருந்தா" என்று சொல்லிக் கொண்டு இருக்கும் பொழுதே கையில் இருந்த குச்சை ஊன்றி விட்டான் உதை மைக்கல் நெஞ்சில் . வறுமையின் பிணி, பசி கொடுமை,வீட்டு கஸ்டத்திற்காக உழைத்து களைத்த உடம்பு இந்த கொழுத்த மனிதனின் உதையை தாங்குமா ? ஆண்டவரே என்று சொல்லிக் கொண்டே விழுந்தான் மைக்கல் . "எனது வீட்டை எட்டி பார்க்ககூட தகுதியில்லாத நாய் என்னிடமே வந்து காசு கேட்கிறாயா" என கூறி தனது வேலையாட்களை அழைத்து மைக்கலை ஒரு மரத்தில் கட்டி அடித்தான். இரக்கங்கெட்ட அந்தோணி பாவம் மைக்கல் அடி தாங்கமுடியாமல் அலரினான். அவனின் அலரல் சத்தம் அந்த ஊரையே அத்தோனியின் வீட்டு வாசலிற்கு வரவைத்தது. மைக்கலின் மனைவி, பிள்ளைகளும் ஓடி வந்தனர். அங்கு வந்ததும் தனது கணவனின் நிலையை கண்டு மயங்கி விழுந்தாள் மைக்கலின் மனைவி. மைக்கலின் உடல் இரத்தத்தால் குளிக்காட்ட பட்டு காணப்பட்டது.

இதை கண்டதும் மைக்கலிக் மூத்தமகன் தேவதாஸ் கொதித்து எழுந்தான் சுற்றும் முற்றும் தேடி கையில் அகப்பட்ட ஓர் இரும்பு கம்பியை எடுத்து "டேய்." என்று ஓடி சென்று தனது தந்தையை அடித்த அனைவரையும் அடித்து அரையுயிர், குத்துயிர் ஆக்கினான். பின் கையில் இருந்த இரும்பு கம்பியை அந்தோனியின் காலடியில் போட்டுவிட்டு தனது தந்தையை அருகில் இருந்த வைத்தியசாலைக்கு கொண்டு சென்று வைத்தியம் செய்தான்.

சிறிது காலம் சென்றதும் ஊரிற்கு ஓர் செய்தி பரப்பப்பட்டது மக்கள் அனைவரும் அந்தோனியின் வீட்டு பக்கம் சென்றனர். அச்செய்தி மைக்கலின் குடும்பத்திற்கும் அறிய வந்தது. உடனே மைக்கல் எழுந்தான் . அவனின் மனைவி "எங்க போறீங்க என்ன நடந்தாலும் அந்த துரோகிட வீட்டுப்பக்கம் நீங்க போகக்கூடாது என்றாள்" பேபி இப்போது மைக்கள் "பேபி ஆண்டவர் சொன்னது பகைவரை அன்புசெய்ய சொல்லி. அவர் என்னதான் செய்து இருந்தாலும் ஒன்று என்றால் ஓட வேண்டியது நாம் தான் இல்லாவிட்டால் ஆண்டவரின் இரக்கத்தை நாம் பெறமுடியாது. அவர் என்னதான் செய்தாலும் நாம் அதை அவருக்கு மாறி அவருக்கு செய்வது அழகு இல்லை" என பேபிக்கு அறிவுரை சொன்னான். அதை கேட்டதும் பேபி தனது கண-வனையும் அவனது அன்பையும் நினைத்து "நீங்க எனக்கு புருசனா வர நான் போன ஜென்மத்தில என்ன புண்ணியம் செய்தனான் என எனக்கு தெரியல்ல. கடவுள் நான் கண்ணால காண்கிற மாதிரி இருக்கு" என ஆனந்த கண்ணீர் விட்டாள்.

பிறகு மைக்கலும் அவனது மனைவியும் அங்கு சென்று படுத்த படுக்கையாய் கிடந்த அந்தோணியைக் கண்டு பரிதாபப்பட்டனர். அந்த இரக்க குணம் கொண்ட மைக்கள் வந்திருக்கான்" என்றான். அந்த அந்தோனி "மைக்கலின் கைகளை பிடித்து, மைக்கள் நான் மிகப்பெரிய பாவம் செய்து விட்டேன் அதற்கான தண்டனையை கடவுள் எனக்கு தந்துவிட்டார்" எனக்கூறி கதறினான். இதைக் கண்ட மைக்கல் ஐயா நான் உமக்கு எனது கிட்ணி ஒன்றை தருகிறேன். என கூறியதும் ஒருமாதமே வாழப்போகிறேன் என பயந்த அந்தோணி சற்று திடம் பெற்றான். பின் அந்தோணியின் கிட்னி மாற்றல் சிகிச்சைகள் ஆய்த்தம் செய்யப்பட்டது. வீட்டிற்கு போனவுடன் பேபி "உமக்கு என்ன பைத்தியமா" என மைக்கலை திட்டினாள். அதற்கு மைக்கல் "இல்லை பேபி இந்த இரக்கத்தின் ஆண்டில் இறைவனின் தூண்டுதலாலேயே செய்கிறேன் என்று கூறினான்".

சற்று காலத்தின் பின் அந்தோனியின் கிட்னி மாற்றல் சிகிச்சைகள் முடிந்தது. பூரண குணம் பெற்றான். தனக்கு இறைவன் இரக்கம் என்றால் என்ன என்பதை காட்டியுள்ளார். ஆகவே நான் இந்த ஆண்டில் ஏதாவது ஓர் இரக்கச் செயல் செய்யவேண்டும் என உணர்ந்த அந்தோணி தனக்கு வாழ்வளித்த பிள்ளைகளின் படிப்பை மீள தொடரச் செய்தான். மைக்கலின் குடும்பத்தை தானே பாதுகாத்தது மட்டும் இல்லாது ஊரிற்கே உதவி செய்தான்.

ஆகவே இயேசுவிற்குள் வாழும் கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் இறைவனின் மிகப்பெரிய இரக்கத்தையும், அன்பையும் உணர்ந்தவர்கள் தெரிந்தவர்கள் . ஆகவே இவ்விரக்கத்தின் ஆண்டை இறைவன் அளித்த வாய்ப்பாக நினைத்து மைக்கலைப் போல் இல்லாவிடிலும் எம்மால் இயலுமான ஏதாவது ஓர் இரக்கச் செயலை புரிந்து வாழ வேண்டும். இல்லாவிட்டால் எமது தந்தை எம்மில் இரக்கம் காட்டமாட்டார். தந்தையின் இரக்கத்தை பெற இரக்கச் செயல் புரிந்து வாழ்வோம்.

ஆக்கம்: டி.ஜெரோம்

தூய யோவேவாஸ் சிறிய குருமடம், திருகோணமலை

# புதுமை புரியும் பதுவை புனிதர்



உங்கள் செல்வம் எங்கே உள்ளதோ.

உன்னதர் இயேசு சொன்ன பொன்மொழிகளுள் ஒன்று "உங்கள் செல்வம் எங்கு உள்ளதோ அங்கே உங்கள் இதயமும் இருக்கும்" (லூக்12:34) அந்தோனியார் வாழ்வில் இதை மெய்பிக்கும் நிகழ்வு இதோ.......

இத்தாலியில் செல்வம் மிக்க ஒருவர் இருந்தார் உத்தமராக அவர் வாழவில்லை உலகச் செல்வத்தை எத்தனை வழிகளில் எப்படியெல்லாம் சேர்க்கலாமோ அத்தனை வழிகளிலும் திரட்டினார். ஏழைகள் வந்து செத்துவிடுவோம். பசிக்கு உணவிடுங்கள் என்றாலும் கத்திக் கொண்டே கதவைத் தாழிட்டு விடுவார். அத்தகைய வரை ஒருநாள் சாவு அணைத்துக் கொண்டது.

அந்தப் பகுதியில் மிகப்பெரிய செல்வர் ஆதலின் இறுதிச் சடங்கு ஊரே திரண்டது. அடக்கம் செய்ய அவரது உடலைக் கொண்டு செல்கையில் அந்தோனியார் எதிரே வந்தார். தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு அவர் உரத்த குரலில் கூவினார். நிறுத்துங்கள் தூய்மையான கல்லறையில் புதைக்கப்படப் பொருத்தமான செயல்களை இவர் செய்ததில்லை எப்போதும் வெறுத்தார் அற செயல்களை ஏழையருக்கு உதவமறுத்தார்.

மக்கள் திகைத்தனர் "எங்களால் மிகவும் வணங்கத்தக்கவரே இவரது உடலை எங்கே வைப்பது?" "திக்கற்றவர்க்கு ஏதும் தராத இவர் உடலை ஆற்றின் அக்கரையில் எறிந்து விடுங்கள் இறைவனின் கட்டளைகளில் அக்கறை இல்லாதவனுக்கு இதுவே தக்க தண்டனை" திக்கென்றது மக்களுக்கு ஆற்றங்கரையிலா?. செல்வத்தில் மிக்க ஒருவரை இப்படியா இழிவாகப் புதைப்பது? "மக்களே இன்னொன்றும் உங்களுக்குச் சொல்கிறேன் மக்கிப் போகும் இவனது உடலில் இதயம் இல்லை."

நம்பமுடியவில்லை மக்களால், நம் அந்தோனியார் வம்பு செய்கிறாரா? அதெப்படி மனித உடலில் இதயம் இல்லாமல் இருக்க முடியும்? இது என்ன புதுக்கதை? ஆனாலும் அந்தோனியார் நல்லவர் அல்லரா? யார் மீதும் இல்லாததையும் பொல்லாததையும் இட்டுக்கட்டிச் சொல்லமாட்டாரே?

மருத்துவர் வந்தார் உடலை அறுத்தார் திரு அடியார் சொன்னது போல் நெஞ்சுக்கூட்டில் இதயமில்லை வியப்பிலும் அதிர்ச்சியிலும் கூட்டத்தினர் உறைந்தனர் தயங்கியவாறே ஒருவர் அப்போது கேட்டார் "கயவரின் இதயம் எங்கே இருக்கிறது?"

"இப் பணக்காரனின் வீட்டிலிருந்து இவனது பணப்பெட்டியை இப்போது இங்கே கொண்டு வாருங்கள் உண்மை புரியும்" பெட்டி வந்தது உடைக்கப்பட்டது. எல்லோரும் ஆவலுடன் எட்டிப் பார்த்தனர். ஏராளமான பணம், நகைகளின் நடுவே கெட்டியான இதயம் அப்போதும் துடித்துக்கொண்டிருந்தது. அந்தோனியாரின் சொல்லில் இருந்த உண்மை இந்த நிகழ்வால் வெட்ட வெளிச்சம் ஆனது செல்வனின் அந்த உடலை ஆற்றின் அக்கரையில் புதைத்தனர்.

ஆக்கம் . பா.இ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டி

### கவிதைப் போட்டியில் (மலைப்பொழிவு)

### 1ம் இடம் பெற்ற கவிதை



மனிதா துன்பத்தைக் கண்டு துவண்டு விடாதே.
துயரத்தைக் கண்டு ஓடிவிடாதே
பொறுமையை விதைத்துப் பார்
அன்பை அறுவடை செய்வாய்

உண்மைக்காக போராடிப் பார்
உறவுகளை வளர்த்திடுவாய்
கனிவோடு பேசிப்பார்
கருணையைக் காண்பாய்
தூசிப்போர் மத்தியில் துணிந்து நில்.
இரக்கத்தின் வாழ்வில் பேறுகொள்வாய்

ஆக்கம் : ச. மிதுஸன்.
பாலையூற்று.

---

## பெற்றோர்



எத்தனை கோடி கொடுத்தாலும்
வாங்க முடியாத இரத்தின கற்கள் பெற்றோர்

கடல் கடந்து சென்றாலும் - பிரிவில்
கலங்கும் உறவு பெற்றோர்

ஆறடி குழியில் ஆழ்ந்து உறங்கினாலும்
ஆறாத காயங்களுடன்அனுதினம் வாடும்
அன்பு பூக்களே பெற்றோர்.

ஆக்கம்: ரி.ஜெரோம்.
தூய ஜோசப்வாஸ் சிறிய குருமடம்.
திருகோணமலை

---

## மறைக் கல்வி கற்போம் -16



01. அருளடையாள கொண்டாட்டங்களுக்கு உரிய அமைப்பு என்ன?
    1. தொடக்க சடங்கு
    2. இறைவார்த்தை வழிபாடு
    3. அருளடையாள (குறிப்பிட்ட) சடங்குவழி
    4. முடிவு, நிறைவு சடங்கு.

02. அருளடையாளங்களின் வகை எவை?
    1. புகுமுக அருளடையாளம்
    2. நலம் தரும் அருளடையாளம்
    3. பணியின் அருளடையாளம்

03. திருமுழுக்கு எத்தனை வகைப்படும்?
    1.தண்ணீர் திருமுழுக்கு
    2.இரத்த திருமுழுக்கு
    3.விருப்பத் திருமுழுக்கு

04. புனிதர்கள் என்பவர்கள் யார்?
    அருள் நிலையில் வாழ்கின்ற ஒவ்வொருவரும்

05. திருச்சபையில் திருத்தந்தையர்கள் யாருடைய வாரிசுகளாக வருகின்றார்கள்?
    தூய பேதுருவின்

06. அப்போஸ்தலர்களின் வாரிசுகள் யார்?
    ஆயர்கள்

07. திருச்சபையின் உறுப்பினர்கள் என்ற வகையில் நமக்குள்ள கடமைகள் என்ன?
    கிறிஸ்துவின் போதனைபடி வாழ்வது.
    திருச்சபையின் பணியில் பங்கேற்பது.

08. தெய்வ பயம் என்றால் என்ன?
    கடவுளின் மகிமையும் அவருடைய பேரன்பையும் வியந்து போற்றுதல்

09. பக்தி என்றால் என்ன?
    கடவுள் மீதுபற்றுறுதி கொண்டு அவருக்கு நம்மை முற்றிலும் அர்ப்பணித்தல்.

10. திடம் எனறால் என்ன?
    இடர்கள் நேரிடினும் கடவுளின் விருப்பத்தைத் துணிவுடன் நிறைவேற்றுதல்.

---

## அன்னைக்கு நிகர் அன்னையே Fr. N.C

### அன்னையர் தின சிறப்புப் போட்டி



* அன்னையின் மேன்மையைப் புகழ்வோமே
* தன் சுமைகள் சுமந்தே துயர்களேற்றே
* தன்னையே தந்த அன்னைக்கு நிகர்
* அன்பிற்கு நிகராக ஏதுமில்லையே
* நம்வாழ்வு வளமாக வழிகள் செய்த
* அன்னைக்கு நிகராக யாருமில்லை அவள்
* தரணியில் வேறேதுமில்லையே

\# வரிகளை சரியாக வடிவமையுங்கள்
\# போட்டியில் எல்லோரும் பங்கு கொள்ளலாம்
\# தனியான தாளிலே வடிவமையுங்கள்
\# எல்லோரும் சரியாக வடிவமைத்தால்
\# குலுக்கல் முறையில் பரிசு

**1ம் இடம் ரூபா 400/=**
**2ம் இடம் ரூபா 300/=**
**3ம் இடம் ரூபா 200/=**

முடிவுத்திகதி: 10.07.2016
அனுப்பவேண்டிய முகவரி :
அன்னையர் தின சிறப்புப்போட்டி
ஆசிரியர்
'திருமலைத்தீபம்'
இல :297, டொக்கியாட் வீதி,
திருகோணமலை

---

## நான் நீங்களாக வேண்டும்

ஒன்று தான் என் ஆசை **அந்தோனியாரே**
சொன்னால் அன்புடன் நிறைவேற்றுவீர்களா?

என்றும் இறையன்பால் இதயத்தை **நிறைத்தீர்கள்**
கன்னியின் மகனைக் கையில் **ஏந்தினீர்கள்**

உன்னத மறைநூல் கடலில் முத்து **எடுத்தீர்கள்**
கண்ணீரைக் கண்ட போது புதுமை **புரிந்தீர்கள்**

தன்னலம் கொண்டோரைத் தூயோராய் **மாற்றினீர்கள்**
அன்பின் சுடராக உலகில் **ஒளிர்ந்தீர்கள்**

நிறைக்கவும் ஏந்தவும் எடுக்கவும் புரியவும்
நிறைவாய் மாற்றவும் ஒளிரவும் வேண்டும் நான்

இந்நேரம் உங்களுக்குப் புரிந்திருக்குமே ஆம் நான்
இன்னொரு நீங்களாக வேண்டும்.

ஆக்கம் : பா.அரட்சண்யதாசன்
தஞ்சாவூர்

---

## யாது நிகர்




மூழ்கிப் போன என்
முன்னைய நினைவுகளை
கொஞ்சம் முங்கி எடுத்து
மீட்டலானேன்

பதிது முழுநிலவிரவுகள்
எனக்காய் - அவள்
தன் நித்திரை மூழ்கடித்த
கண்பொழுதுகள் -என்
குருதியில் கசிகையில்
முடங்கிய நரம்புகளும்
கொஞ்சம் கொஞ்சமாய்
முலாமிடத் தொடங்கியது

எண்ணற்ற மொழிகள்
தோன்றலாம்
எண்ணாயிரம் வரிகள்
ஈன்றலாம்
"அம்மா"
அவளுக்கு யாது நிகர்!

ஆக்கம் : கபிரியேல் ஹாட்சன்
மூதூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்குகளிலிருந்து சேர்க்கப்பட்ட காணிக்கைகளின் திருத்தப்பட்ட விபரம்

### மறைபரப்பு ஞாயிறு பங்குகளின் காணிக்கை 2015

| இல | பங்கு | பெற்ற தொகை |
|---|---|---|
| 01 | தூய லூர்து அன்னை பாலையூற்று | 26.900.00 |
| 02 | தூய மரியாள் பேராலயம் | 10.000.00 |
| 03 | தூய சூசையப்பர் நிலாவெளி | 10.000.00 |
| 04 | குழந்தை இயேசு உவர்மலை | 9.255.00 |
| 05 | தூய வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 9.030.00 |
| 06 | தூய திருமுழுக்கு யோவான் சாம்பல்தீவு | 8.650.00 |
| 07 | தூய குவாடலூப்பே சின்னக்கடை | 8.051.00 |
| 08 | தூய அந்தோனியார் மூதூர் | 6.000.00 |
| 09 | திரு இருதய ஆண்டவர் மூதூர் | 5.000.00 |
| 10 | இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 4.200.00 |
| 11 | தூய அந்தோனியார் சீனக்குடா | 2.500.00 |
| 12 | தூய செபமாலை மாதா குச்சவெளி | 1.000.00 |
| 13 | தூய சதாசகாயமாதா கந்தளாய் | 900.00 |
| | முழுத் தொகை | 101.486.00 |

### மறை மாவட்ட திருப்பாலத்துவ சபை ஞாயிறு பங்குகளின் காணிக்கை விபரம் 2016

| இல | பங்கு | தொகை |
|---|---|---|
| 01 | தூய லூர்து அன்னை பாலையூற்று | 40.040.00 |
| 02 | தூய குவாடலூப்பே சின்னக்கடை | 13.080.00 |
| 03 | தூய மரியாள் பேராலயம் | 10.000.00 |
| 04 | திரு இருதய ஆண்டவர் மூதூர் | 8.000.00 |
| 05 | குழந்தை இயேசு உவர்மலை | 7.200.00 |
| 06 | தூய வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 6.170.00 |
| 07 | தூய திருமுழுக்கு யோவான் சாம்பவல்தீவு | 5.800.00 |
| 08 | இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 4.200.00 |
| 09 | தூய சதாசகாய மாதா கந்தளாய் | 3.250.00 |
| 10 | தூய சூசையப்பர் நிலாவெளி | 3.120.00 |
| 11 | தூய அந்தோனியார் மூதூர் | 3.000.00 |
| 12 | தம்பலகாமம் | 2.000.00 |
| 13 | தூய அந்தோனியார் சீனக்குடா | 1.850.00 |
| 14 | கிறிஸ்து அரசர் கன்னியா | 1000.00 |
| 15 | தூய செபமாலை மாதா குச்சவெளி | 700.00 |
| | முழுத் தொகை | 109.410.00 |

### பங்குகளின் பெரிய வெள்ளி நன்கொடை விபரம் 2016

| இல | பங்கு | பெற்ற தொகை |
|---|---|---|
| 01 | தூய லூர்து அன்னை பாலையூற்று | 58.820.00 |
| 02 | குழந்தை இயேசு உவர்மலை | 21.110.00 |
| 03 | தூய மரியாள் பேராலயம் | 20.000.00 |
| 04 | தூய குவாடலூப்பே சின்னக்கடை | 16.060.00 |
| 05 | தூய அந்தோனியார் மூதூர் | 12.000.00 |
| 06 | இறை இரக்கம் அலஸ்தோட்டம் | 10.000.00 |
| 07 | திரு இருதய ஆண்டவர் இருதயபுரம் மூதூர் | 10.000.00 |
| 08 | தூய திருமுழுக்கு யோவான் சாம்பவல்தீவு | 7.700.00 |
| 09 | தூய வனத்து அந்தோனியார் செல்வநாயகபுரம் | 7.000.00 |
| 10 | தூய சதாசகாய மாதா கந்தளாய் | 4.400.00 |
| 11 | தம்பலகாமம் | 4.000.00 |
| 12 | தூய அந்தோனியார் சீனக்குடா | 2.500.00 |
| 13 | கடற்படைத்தளம் | 1.900.00 |
| 14 | தூய செபமாலை மாதா குச்சவெளி | 1.250.00 |
| 15 | கிறிஸ்து அரசர் கன்னியா | 1.000.00 |
| | முழுத்தொகை | 177.740.00 |

தகவல் : அருட்பணி. டே. அன்ரு ஸ்ரீபன்
நிதிப்பொறுப்பாளர்,
ஆயர் இல்லம், உவர்மலை,
திருகோணமலை

# இளைஞர் யுவதிகளுக்கான கலந்துரையாடல்

கடந்த 17.04.2016 அன்று காலை 09 மணியளவில் செல்வநாயகபும் தூய வனத்து அந்தோனியார் ஆலயத்திற்கு இலிங்கநகரில் இருக்கும். அன்னைத் தெரெசா கன்னியர் சபையைச் சேர்ந்த இரு அருட்சகோதரிகளும் அச்சபையின் கண்டி கன்னியர் மடத்தைச் சேர்ந்த ஒரு அருட்சகோதரியும் வருகை தந்திருந்தனர். அவர்கள் எமது பங்கிலுள்ள 16 வயதிற்கு மேற்பட்ட இளைஞர்களையும் யுவதிகளையும் சந்தித்தார்கள்.

இக் கலந்துரையாடலில் 29 இளைஞர் யுவதிகள் கலந்து பயன் பெற்றனர் நான் யார்? கடவுள் எனக்காக என்ன திட்டம் வைத்திருக்கிறார்? கடவுளை நாம் உண்மையாக அன்பு செய்கிறோமா? கடவுளின் நண்பராவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? என பல கேள்விகள் கேட்டு அதற்கான விளக்கத்தையும் அருட்சகோதரிகள் இளைஞர்களுக்கு தெளிவுபடுத்தி இருந்தார்கள்.

காலை 10.30 மணியளவில் இக் கலந்துரையாடல் இனிதே நிறைவு பெற்றது இனிவரும் காலங்களிலும் இவ்வாறான கலந்துரையாடல்கள் நடாத்தப்படும் என்று பங்குத்தந்தை அறிவித்துள்ளார். சிறு நன்றியுரையுடன் இக் கலந்துரையாடல் இனிதே நிறைவு பெற்றது.

தகவல்: யூ. ஆன் ரெமோனா
செயலாளர்
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்.

# இளைஞர் யுவதிகளின் விழிப்புணர்வு சுற்றுலா

கடந்த 13.4.2016 அன்று மன்னார் மறை மாவட்டத்தைத் சேர்ந்த வேப்பம்குளம் தாழ்வப்பாடு எனும் பங்குகளில் உள்ள இளைஞர் யுவதிகள் மற்றும் அருட்பணி லக்ஸ்டன் டி சில்வா அருட்பணி செபஸ்டியான் றெவல் அருட்பணி சுகுனராஜ் அருட்பணி இயேசுபாலன் OMI இரு அருட்சகோதரிகளுடன் திருகோணமலை மறைமாவட்டத்திற்கு விழிப்புணர்வு சுற்றுலாவை மேற் கொண்டிருந்தனர்.

சுற்றுலாவின் ஒரு பகுதியாக அவர்கள் செல்வநாயகபுரம் தூய வனத்து அந்தோனியார் ஆலயத்திற்கு மாலை 7.30 மணியளவில் வருகை தந்திருந்தனர். அவர்களை பங்கு இளைஞர் ஒன்றியத்தைச் சேர்ந்தவர்கள் அன்புடன் வரவேற்று அவர்களுக்கான தேநீர் உபசாரம் மற்றும் இரவு உணவுகளை வழங்கினார்கள் அதனைத் தொடர்ந்து “FOR GREATER GLORY” எனும் கத்தோலிக்க திரைப்படம் அவர்களுக்கு காட்டப்பட்டு அதற்கான விளக்கங்களும் அளிக்கப்பட்டது. பின்பு விவிலியத்தில் இருந்து வசனங்கள் எடுக்கப்பட்டு 02 குழுக்களாக பிரித்து சிறு விளையாட்டு நடைபெற்றது.

அதன் பின் கலை நிகழ்வுகள் இடம் பெற்றன. 11 மணியளவில் நன்றியுரையுடன் இக் கலந்துரையாடல் இனிதே நிறைவு பெற்றது. இந் நிகழ்வுக்கு பங்கின் மரியாயின்சேனை அங்கத்தவர்கள் ஒத்துழைப்பு வழங்கினார்கள்.

ஆக்கம் : யூ. ஆன் ரெமோனா
செயலாளர்
கத்தோலிக்க இளைஞர் ஒன்றியம்

# குட்டிக் கதை ஒன்று

Fr.N.C...

வறுமையில் வாழும் கிராமம் அக்கிராமத்திற்கு ஒரு வாகனத்திலே பலர் முதன் முறையாக சுற்றுலா வருகின்றார்கள் . வந்தவர்கள் அக்கிராம வாசிகளை அவதானிக்கிறார்கள். அவர்கள் பழகுவது அவர் கதைப்பது உறவாடுவ தெல்லாமே வியப்பாகவிருந்தது. இப்படியும் மக்கள் அதுவும் இந்த வறுமைக்குள்ளும் என்பதை எண்ணி பலரும் வியபுற்றார்கள்.

வாகனத்திலே வந்த சுற்றுலாப் பிராயாணிகளுக்கு பெரும் ஆச்சிரியமாக இருந்தது. வறுமை இருந்தாலும் அன்பு மறையாது இருந்தது. எல்லோருக்கும் ஆச்சரியத்தை ஊட்டியது. இருக்கிறார் அன்பும் நட்பும் எங்குள்ளதோ அங்கே இறைவன் இருக்கிறார் என்பது முற்றிலும் உண்மைதானே...!

உனது மனசாட்சிக்கு மறுபெயர் தான் கடவுள் உன் உள்ளேயே உள்ள தெய்வத்தைப் பூஜித்தால் தவறுகளிலிருந்து தப்பிக் கொள்ளலாம்.

(பெஞ்சமின் பிராங்ளின்)

நீங்கள் எவ்வாறு எண்ணுகிறீர்களோ அவ்வாறே உங்கள் சுகமும் துக்கமும் வெளிப்படும்

(பெஞ்சமின் பிராங்ளின்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இரக்கத்தின் ஆண்டு சிறப்புப் போட்டிகளின் முடிவுகள்

### கவிதைப் போட்டி

**பரிசுக்குரியவர்கள்**

| 1ம் பரிசு 500/= ரூபா | 2ம் பரிசு 300/= ரூபா | 3ம் பரிசு 200/= ரூபா |
|---|---|---|
| ச. மிசுஸன்<br>பாலையூற்று,<br>திருகோணமலை. | தே. சமில்டன<br>3ம் வட்டாரம் நிலாவெளி,<br>திருகோணமலை. | எஸ். ஏஞ்சல் விக்டரின்,<br>பாலையூற்று,<br>திருகோணமலை. |

பங்குபற்றியவர்கள் : 08பேர்

### சிறுவர்களுக்கான நிறம் தீட்டுதல் போட்டி

**பரிசுக்குரியவர்கள்**

| 1ம் பரிசு 500/= ரூபா. | 2ம் பரிசு 300/= ரூபா | 3ம் பரிசு 200/= ரூபா |
|---|---|---|
| டே.மெருஷின் பிள்ளை<br>இல: 68 சகாய இல்லம்<br>உவர்மலை,<br>திருகோணமலை. | டானியலா.ஆர்.எப்<br>இல : 21/3 ,<br>வித்தியாலயம் வீதி,<br>திருகோணமலை. | அ. ஜெருஷா<br>இல : 27/15.1ம் ஒழுங்கை<br>பூம்புகார் வீதி,<br>பாலையூற்று. |

பங்கு பற்றியவர்கள் 14 பேர்

பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்

# வரம் ஒருவரம் கேட்போம்

**செபம்**

* உன்னுடைய நடத்தை நன்கு அமைய கடவுளை ஒரு முறையாவது உன் அன்றாட வாழ்வில் நினை.
* ஒரு செயலை செய்யத் தொடங்கு முன் கடவுளை வழிபடு.
* துன்ப நேரத்தில் கடவுளிடம் செபித்து திடனைப் பெற்றுக்கொள்.
* தடுமாற்றங்களைத் தவிர்க்க கடவுளை நாடு.
* குடும்பத்தில் உள்ள அனைவரும் இணைந்து கடவுளை வழிபடுதல் நல்லது
* இளம் வயதிலே குழந்தைகளுக்கு வழிபடக் கற்றுத் தரவேண்டும்.
* ஆன்மீகத்தில் வளர கடவுளை வழிபடு.




**வழிபாடு**

- மகிழ்வோடு கடவுளை வழிபட வழக்கமான ஒரு நேரத்தை ஒதுக்கிக் கொள்.
- சூரிய உதயத்திலும் மறைவிலும் அமைதியாக இறைவனைப் போற்று.
- மழலையின் கள்ளமற்ற சிரிப்பில் இறைவனைத் துதி.
- வேதனையுறும் மனிதனில் கடவுளைக் கண்டு, துயர் துடைக்க முயற்சி செய்.
- இராகம் இசைக்கும் பறவையின் இனியக் குரலைக் கேட்டு கடவுளைப் போற்று.
- அதிகாலையில் கேட்கும் பறவையின் இனிய ஒலி கடவுளின் அழைப்புக் குரல். எழுந்து கடவுளைத் தொழு.
- மலரும் பூவின் அழகை ரசித்து அவ்வழகிற்காக கடவுளை வழிபடு.



**பெருந்தன்மை**

- கொடுப்பது, பெறுவது இரண்டும் பெருந்தன்மையோடு இணைந்த வார்த்தைகள்.
- கொடுப்பதும், பெறுவதும் குடும்ப உறவையும் பிற குடும்பங்களோடு உள்ள உறவையும் வளர்க்கும்.
- கடவுளின் பெருந்தன்மையைப் போற்றிப் புகழ்.
- நீ பெற்றதைப் பிறருக்கு முடிந்த அளவு கொடுத்து மகிழ்.
- கொடுப்பதற்கு முதலிடம் கொடுத்துஅதன் பயனைக் காண்.
- எதிர்பார்ப்பு இல்லாமல் நல்லதைப் பிறருக்குக் கொடு.
- உன்னிடமிருந்து பெருந்தன்மையைப் பிறர் கற்றுக் கொள்ளட்டும்.



**நேர்மை**

- மனசாட்சிக்கு ஏற்ப உன் கடமையைச் செய்.
- கடவுளின் பார்வையில் உன் எண்ணங்கள் தூய எண்ணங்களாய் இருக்கட்டும்.
- நேர்மையை குழந்தைகளுக்குக் கற்றுக்கொடு. அவர்களின் நேர்மையான உடல், உள வளர்ச்சியில் கவனம் செலுத்து.
- நன்மை செய்ய எவ்வழியிலும் சாலச்சிறந்தோரை நாடு
- நற்செயலாக்கம் பெற்ற செயலைப் பாராட்டு.
- இலஞ்சம், வரதட்சணை, கொடுமை இவைகளைத் தவிர்க்கும் நடவடிக்கைகளில் துணிந்து செயல்படு.



நன்றி : பீட்டர் அம்மா

# நறுமணமலர்கள்

### சரியான கவிவரிகள்

* மலர்ந்துள்ள
* பூவொன்றினுள்ளே
* அமர்ந்த மலர் வண்டொன்று
* இனிதாகத் தேன் பருகியங்கே
* இன்புறும் போது அதை
* மலர்களும் கண்டு மணம் வீசுமே.

**பங்குபற்றியவர்கள்:18 பேர்**

**மிகச் சரியாகவடிவமைத்தவர்கள்: 12 பேர்**

பங்கு பற்றிய அவைவருக்கும் பாராட்டுக்களும் நன்றிகளும்

**பரிசுக்குரியவர்கள்**


| 1ம் பரிசு 300/=ரூபா | 2ம்பரிசு200/= ரூபா | 3ம்பரிசு150/= ரூபா |
|---|---|---|
| திரு என். ஜெலஸ்டின்<br>மின்சார நிலைய விதி,<br>மூதூர்-07. | வேர்ஜினியா.எல்டன்<br>இல:12முதல் தெரு<br>பாரதிபுரம்<br>திருகோணமலை. | ஏ.பி.துஸாந்தன்<br>மின்சார நிலைய வீதி<br>மூதூர்-07 |

**பாராட்டுக்குரியவர்கள்**

| | | |
|---|---|---|
| 01. | செல்வி: றொவினா றொஜிலியோ | - பேராலயம். |
| 02. | திருமதி. ஜே.ரி. காமலின் | - மூதூர். |
| 03. | சி. ஹஸ்லியன் | - நிலாவெளி. |
| 04. | திருமதி. றொசேன் றொஜிலியோ | - பேராலயம் |
| 05. | திருமதி. எஸ்.சந்தியா குருஸ் | - அன்புவழிபுரம் . |
| 06. | செல்வி. ரெ.மேரிரொஷானி | - இலிங்கநகர். |
| 07. | செல்வி. ஏ.ஜி. சாதனா | - மன்னார் . |
| 08. | செல்வன். தே. சமில்டன் | - நிலாவெளி. |
| 09. | செல்வி. றிசேன் எல்டன் | - பேராலயம் . |

# சின்ன அந்தோனியார் பெரிய அந்தோனியார்





அம்மா எத்தனை அந்தோனியார் இருக்கிறார்கள். என்று ஒர் மூன்றரை வயதுச் சிறுவன் ஜே. சரியான சுட்டிப் பையன். சாப்பாட்டிற்கு மிகவும் கஷ்டப்பட்டே சாப்பிடக் கொடுப்பார்கள். தாயும் ஒவ்வொரு சாக்குப் போக்குச் சொல்லியே சாப்பாட்டைக் கொடுப்பாள். அப்பையன் இந்தக் கேள்விகளைக் கேட்டதும் தாயார் ஏன் தம்பி ஒரு அந்தோனியார் மட்டும்தான் இருக்கிறார் எனக் கூற பையனும் சோனகவாடி அந்தோனியார் கோவிலில் சின்ன அந்தோனியார் ஒருவரும் பெரிய வளர்ந்த அந்தோனியார் ஒருவரும் இருக்கிறார்களே அது ஏன் என்றான்.

அதற்குத் தாயாரும் அது அந்த சின்ன அந்தோனியார் சிறு வயதில் உங்களைப் போல சாப்பிடக் கள்ளம். பின் சிறிது நாளைக்குள் நன்றாகச் சாப்பிட்டு கூடிய கெதியில் வளர்ந்து பெரியவராகி விட்டார். அவர் தான் பெரிய அந்தோனியார். தம்பி நீங்களும் நல்லாச் சாப்பிட்டு யேசப்பாவைக் கும்பிட்டு அவரைப் போல நல்ல பிள்ளையாக வளர மன்றாடுங்கள். அப்போது நீங்களும் கூடிய கெதியில் வளர்ந்து பெரிய அந்தோனியார் போல் ஆகிவிடுவீங்க. என்று கூறினாள்.

மகனும் அம்மா இனிமேல் நானும் நீங்கள் சொன்னபடி நடப்பேன். கெதியாக வளர வேண்டும். இப்போ பசிக்கிறது. சாப்பாட்டைத் தாருங்கள் என்று கூறினார்.

ஆக்கம் :ஜோதி

# அகில இலங்கை சிங்கள தினப் போட்டி - 2015



மேற்படி போட்டியில் திருகோணமலை சென்ற் மேரிஸ் கல்லூரி மாணவி செல்வி டெல்மா நட்டாஷா றூாப் தரம் - 09 பிரிவில் பேச்சுப் போட்டியில் பங்கு பற்றி பாடசாலை மட்டத்தில் 1ம் இடமும், வலய, மாகாண மட்டங்களில் முறையே 2ம் இடமும் பெற்று அகில இலங்கை ரீதியான போட்டியில் 1ம் இடமும் பெற்றார்.

இவரை வாழ்த்துகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி – 19

### திருத்தூதர் பணி அதி : 25 – 28 வரை

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சு | ■ | வ | | | | | ■ | | கா |
| | ■ | | | | | | இ | | |
| | கா | | ■ | ஆ | ■ | இ | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | | | | | | | | | |
| | ■ | | செ | ■ | தீ | | தோ | | |
| | ■ | மூ | ■ | ஏ | | | | அ | |
| ■ | | | | | | | வா | ■ | |
| ஆ | | | | | | | | | ■ |

01. வர...ற்று
02. இள... மு...ல்
03. சுட... வீசி... ஒளி
04. அல்...ம் பகலு...
05. கா...கள்
06. ஆ...சனை
07. வா...க் கொண்...ல்
08. மூ......று விடுதி
09. ஆ... பிற...பி...தார்
10. கால...தாழ்....தா....ல்.
11. ஏ.... நா...
12. செந்....றை
13. தோ...றி...ன்
14. இத்....லி.....
15. தீ மூ....டி

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

பங்கு : ......................................................

முடிவுத்திகதி : 10.07.2016

குறிப்பு :-

@ கடந்த மாத இதழில் விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டி -17ன் விடைகள் தான் பிரசுரிக்கப்பட்டது. அது போட்டியல்ல.

@ விடுபட்ட எழுத்துப் புதிர் போட்டியில் தரப்பட்ட சதுரங்களும், கீழ்தரப்பட்ட இடைவெளிகளிலுள்ள சொற்களும் நிரப்பப்படல் வேண்டும். சதுரங்கள் மட்டும் நிரப்பப்பட்டு அனுப்பப்படும் போட்டிகள் குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

## ஹாய் குட்டீஸ்

### திருவிவிலிய புதிர் போட்டி எண் : 25

1 சாவேல் 21-31 அதிகாரங்கள்

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01. | சீபியர் | (26:01) | 06. | 3000பேருடன் | (24:02) |
| 02. | சுமன் 400பேர் | (22:02) | 07. | இராமாவில் | (28:03) |
| 03. | 1 ஆண்டும் 4 மாதமும் | (27:07) | 08. | தாவீது | (23:14) |
| 04. | கில்போவா | (31:08) | 09. | பதினாயிரம் (10.000) | (21:11) |
| 05. | இஸ்ரயேலர் | (29:01) | 10. | ஈட்டியை | (22:06) |

**பங்குபற்றியவர்கள் : 25 பேர்**

மிகச்சரியான விடையளித்தோர் : 16 பேர்

பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும்.

பரிசுக்குரியவர்கள்
1ம் பரிசு 500/= ரூபா
செல்வி. எஸ். கன்சிஹா
3ம் வட்டாரம்.
நிலாவெளி.

3ம் பரிசு 200/= ரூபா
செல்வன் பி.பெலிசியன்
இல: 08, பூம்புகார் வீதி,
பாலையூற்று.

2ம் பரிசு 300/= ரூபா
செல்வன் தே.சமில்டன்
3ம் வட்டாரம்.
நிலாவெளி.



**பாராட்டுக்குரியவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. இ. லினா சியோனி | - நிலாவெளி. | 08. செமீரா யோன்சன் | - பேராலயம். |
| 02. அ. கரோளினி கிறீப்திக்கா | - பேராலயம். | 09. பியூலா டானியலா .ஆர்.எப் | - பேராலயம். |
| 03. றொ. ஷெசரோலின் | - அன்புவழிபுரம். | 10. எ.ஸ். ராகுல் | - பாலையூற்று. |
| 04. டெ. இவேஞ்சலின் | - உவர்மலை. | 11. ஆன் வஜிரா. ஆர்.எப் | - பேராலயம். |
| 05. டானியலா. ஆர்.எப் | - பேராலயம். | 12. பி. ஜக்குலின் | - கன்னியா. |
| 06. சரோனா. ஆர்.எப் | - பேராலயம். | 13. நிலாஸா. நிலோஜன் | - குவாடலூப்பே. |
| 07. ஜோயலா மகென்சி போல் | - பாலையூற்று. | | |

### குறிப்பு:

**பரிசுக்குரியவர்கள் பரிசுகளை திருமறைக்கல்வி நடு நிலைய அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.**



## திருவிவிலிய புதிர் போட்டி எண் 26

2 சாமுவேல் 1 -12 அதிகாரங்கள்

01. ஆண்டவரின் பேழை கித்தியனான ஒபேது ஏதோமின் இல்லத்தில் எத்தனை மாதங்கள் தங்கிற்று?
விடை : ......................................................

02. வாள்களின் வயல் என்பதற்கு வேறு பெயர்?
விடை : ......................................................

03. நீர் விரும்பியதை செய்துவிடும் ஏனெனில் ஆண்டவர் உம்மோடு இருக்கிறார், யார் யாரிடம் கூறியது ?
விடை : ......................................................

04. யோனதாவின் மகன் யார்?
விடை : ......................................................

05. சிரியர் யாருக்கு எதிராக அணிவகுத்து போரிட்டனர்?
விடை : ......................................................

06. உன் வீட்டுக்குச் சென்று உன் ......................................................கழுவிக்கொள்.

07. தாவீது யாருக்கு ஆறுதல் கூறினார்?
விடை : ......................................................

08. சவுலின் மகனிடம் இருந்த படைத்தலைவர்களில் ஒருவர் பெயர்
விடை : ......................................................

09. இஸ்பொசேத்தின் கேள்வி யாருக்கு கடுஞ்சினத்தை ஏற்படுத்தியது?
விடை : ......................................................

10. தாவீது சிக்லாவில் எத்தனை நாள் தங்கினார்?
விடை : ......................................................

11. எதை தாவீது பெலிஸ்தியரிடமிருந்து கைப்பற்றினார்?
விடை : ......................................................

12. நாங்கள் உம்......................................................சதையுமானவர்கள்.

பெயர் : ......................................................

முகவரி : ......................................................

பங்கு : ......................................................

முடிவுத்திகதி : 10.07.2016

## விடுபட்ட எழுத்துப் புதிர்போட்டி - 18ன் முடிவுகள்

### திருத்துாதர்பணிகள் அதி. 21 - 24 வரை

**போட்டியில் கலந்து கொண்டவர்கள் – 31 பேர்**

**சரியான விடை எழுதியோர் – 26 பேர்**

### பரிசுக்குரியவர்கள்:-

1ம் பரிசு 500/=
தனுஜா போல்
பாலையூற்று
திருகோணமலை

2ம் பரிசு 300/=
ஆர். எமில்ராஜ்
செல்வநாயகபுரம்
திருகோணமலை

3ம் பரிசு 200/=
செமீரா ஜோன்சன்
37/3, வித்தியாலயம் வீதி
திருகோணமலை



**பாராட்டுக்குரியவர்கள்**

| | | | |
|---|---|---|---|
| 01. P. டொலீடா | - பாலையூற்று | 12. ஆன் வஜீரா R.F | - பேராலயம |
| 02. S. அனோஜா | - நிலாவெளி | 13. அ. கிஷான் | - குவாடலூப்பே |
| 03. தே. சமில்டன் | - நிலாவெளி | 14. து. ஷெபானா | - கன்னியா |
| 04. P. ஜெக்குலின் | - கன்னியா | 15. பியூலா டானியலா R.F | - பேராலயம் |
| 05. E. லினா சியேனி | - நிலாவெளி | 16. A. அன்ரூ சீலன் | - நிலாவெளி |
| 06. A. யூலியட் சில்வியா | - நிலாவெளி | 17. L.S- பியூரா | - பேராலயம் |
| 07. சரோனா R.F | - பேராலயம் | 18. டே. மெருசியன்பிள்ளை | - உவர்மலை |
| 08. ரெ. மேரி றொஷானி | - உவர்மலை | 19. டெ. இவான்ஜலின் | - உவர்மலை |
| 09. ச.டே. வோறன்பிள்ளை | - உவர்மலை | 20. M.R. ஷான் மார்சல் | - உவர்மலை |
| 10. டானியலா R.F | - பேராலயம் | 21. S. நிரஞ்சனி | - பாலையூற்று |
| 11. [illegible] J.T. [illegible] | - மூதூர் | 22. அ. கரோளினி கிறீப்திக்கா | - பேராலயம் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலை மறைமாவட்டத்தில் செபமாலை பேரணி



இறை இரக்கத்தின் ஆண்டை முன்னிட்டு திருகோணமலை மறைமாவட்டத்தில் செபமாலை பேரணி கடந்த 28.5.2016 அன்று நடைபெற்றது. இப்பேரணியானது பாலையூற்று தூய லூர்து அன்னை திருத்தலத்தை நோக்கிச் சென்று திருப்பலியுடன் நிறைவுற்றது. பெருந்திரளான மக்கள் இப் பேரணியில்கலந்துகொண்டார்கள். பேராலயம் குவாடலுப்பே உவர்மலை செல்வநாயாகபுரம் அலஸ்தோட்டம் ஆகிய பங்குகள் இப் பேரணியில் கலந்து கொண்டன.

## மறைமாவட்ட ரீதியில் நடைபெற்ற விவிலிய பேச்சுப் போட்டி



### தமிழ்ப்பிரிவு

**தரம் - 6 -8 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் செல்வி. சிறிஸ்கந்தராசா ஹம்சாளினி - இருதயபுரப்பங்கு
2ம் இடம் செல்வி. அன்ரனி நைனஸ் சருணியா - அலஸ்தோட்டப்பங்கு
3ம் இடம் செல்வன். நோயல் டானியல் திஹாஷன் - உவர்மலைப்பங்கு

**தரம் - 9 - 11 மேற்பிரிவு**

1ம் இடம் செல்வன். அற்புதராதா டிரோன் - உவர்மலைப்பங்கு
2ம் இடம் செல்வி. ஆன் பவுஸ்ரினா அருள்தாஸ் - பேராலயப்பங்கு
3ம் இடம் செல்வி. பயஸ் பத்மசீலன் பிரியதர்ஷினி - இருதயபுரப்பங்கு

### சிங்களப்பிரிவு

**தரம் 6-8 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் செல்வி. ஆர்.எம். சாலினி நிமேஸா - சீனக்குடா (ஆண்டாங்குளம்)பங்கு.
2ம் இடம் செல்வி. எம்.ஏ. சசனிக்கா ஆரனி. - சீனக்குடா பங்கு

**தரம் 9-11 மேற்பிரிவு**

1ம் இடம் செல்வி. பி. அவ்ரில் பெரேஞ்சர் - பாலையூற்று பங்கு
2ம் இடம் செல்வி. ஏ. ஜி. ஹன்சி கிருணிக்கா - சீனக்குடா பங்கு
3ம் இடம்செல்வி. எ.ஸ். சசசினி மகேசிக்கா. - சீனக்குடா (ஆண்டாங்குளம்) பங்கு.

### ஆங்கிலப்பிரிவு

**தரம் - 6 -8 கீழ்ப்பிரிவு**

1ம் இடம் செல்வி டினிஷியா நயோமி றூப் - பாலையூற்றுபபங்கு
2ம் இடம் செல்வன் இந்திரராஜன் சாமுவேல் ஜோசுவா - உவர்மலைப்பங்கு
3ம் இடம் செல்வி கிருபேந்திரா மருதா - செல்வநாயகபுரப்பங்கு

**தரம் - 9 - 11 மேற்பிரிவு**

1ம் இடம் செல்வி ஆன்ஷி டொனேசியா ஜோன்பிள்ளை - பேராலயப்பங்கு
2ம் இடம் செல்வி ஆன் அன்ரனீற்றா சாந்தகுமார் - உவர்மலைப்பங்கு
3ம் இடம் செல்வி டெல்மா நட்டாஷா றூப் - பாலையூற்றுப்பங்கு

பங்கு பற்றிய அனைவருக்கும் வாழ்த்துக்களும் நன்றிகளும் இப் போட்டியில் 1.2.3ம் இடங்களைப் பெற்றவர்கள் தேசிய ரீதியிலான போட்டிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

"ஆண்டவரே உமது நீதியின் பாதையில் என்னை நடத்தும்.[தி.பா5:8]"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org